மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# 2000 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சிவகங்கை, நவ. 14 - சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமார் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி, ஆகிய மூன்று ஒன்றியங்கள் திருப்புவனம் இளையான்குடி பேரூராட்சிகள் மானாமதுரை நகராட்சிக்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் 2024 காலண்டர் போன்ற பரிசுப்பொருட்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் வே.தமிழ்மாறன்,கா.வெங்கட் ராமன், ஆறு.செல்வராசன் துரை.ராஜாமணி, எம். அண்ணா துரை, எம்.ஏ. கடம்பசாமி, திருமதி வசந்தி சேங்கைமாறன் பேரூர் கழக செயலாளர்கள் நாகூர்கனி, பி.ஏ. நஜ்முதீன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இப்ராகிம் கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணா துரை, துணைத் தலைவர் முத்துச் சாமி விவசாய அணி பா.காளிமுத்து, தகவல் தொழில்நுட்ப அணி அமைப் பாளர் சுப.அன்பரசன், நகர்மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர் மற்றும் ஊராட்சிக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பாபு ஜனார்த்தனன்

**நவம்பர் 14 (1989)**



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். பின்னர் தி.மு.க. ஆரம்பித்தவுடன் கழகத்தில் இணைந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பினை பெற்றவர்.

1978ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக பணியாற்றியவர்.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் செய்யாறு தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



சென்னை பெரியார் திடலில் அன்னை மணியம்மையார் அரங்கில் 11.11.2023 – சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பெருங்கவிக்கோ துணைவியார் அன்னை சேதுமதியின் 18 வது ஆண்டு நினைவேந்தலும் தமிழக சிறப்புக்குரியவர்களுக்கு பாராட்டுதலும் பொற்கிழியும், வாழ்த்து விருதும் சென்னை வேல்ஸ் பல்கலைக் கழக மொழிகள் புல முதல்வர் பேராசிரியர் ப.மகாலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் இ.ஜே.சுந்தர் தொடக்கவுரையாற்றிட, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அனைத்து தமிழ்ச் செம்மல்களுக்கு விருதும் பொற்கிழியும் வழங்கி சிறப்புரை ஆற்றினார். பன்மொழிக் கவிஞர் முனைவர் எழில் வேந்தன், முதுபெரும் புலவர் வே.பதுமனார் உள்ளிட்ட பதினெட்டு தமிழறிஞர்களுக்கும் பாராட்டுதலும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பெருங்கவிக்கோவின் புதல்வர்கள் வா.மு.சே.திருவள்ளுவர், வா.மு.சே.ஆண்டவர் வாசிக்க சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளாக தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர் - திருச்செங்கோடு

# முரசொலி முத்து மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, நவ. 14 - நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு நகரக் கழக முன்னாள் செயலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான முரசொலி முத்து நேற்று (13.11.2023) காலை 11 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், தோழர்கள் ஏராளமானோர் மறைந்த முரசொலி முத்து உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

# சென்னை உள்பட 15 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு!

சென்னை, நவ. 14 - சென்னை உள்பட 15 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், வேலூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக் கூடும் என தகவல் தெரிவித்துள்ளனர்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# திருச்சி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு !

திருச்சி மண்டலத்திற்குட்பட்ட திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், எதிர்வரும் 16-11-2023 வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அரங்கில்" கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி நவம்பர்26 அன்று திருச்சியில் நடைபெற உள்ள "கலை இரவு" விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18 -
நாள்: 11 -11- 2023.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

# 26 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணாவின்
பெருமைமிகு மாணவன்...
முத்தமிழறிஞர் கலைஞரின்
விசுவாசமிகு தம்பி...
கழகத்தலைவர் தளபதியின்
பாசமிகு தமையன்...
நீங்கள் திராவிடம் செதுக்கிய கல்வெட்டு;
பாச நினைவோடு வாழ்கிறோம் - உமை விட்டு!



தோற்றம்: 11–05–1937 மறைவு: 14–11–1997

## திரு. என். வி. என். சோமு

முன்னாள் அமைப்புச் செயலாளர், தி.மு.க.,
முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை
இணை அமைச்சர்

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்

**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு**

M.B.B.S. M.S. (OBST. & GYNAC.)

மாநிலங்களவை உறுப்பினர்,
மாநில மருத்துவ அணித் தலைவர்,
செய்தி தொடர்பாளர், தி.மு.க.